

# நாவலர் குரல்

நாவலர் புகழ் பரப்பும் நல்ல தமிழ் ஏடு

குரல்: 1 ஒலி: 8 ஆவணி, புரட்டாதி 1986 - 08 - 01 விலை: ரூபா 2-00

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் சிலையை

# மக்கள் சக்தி மீட்கும்

### சைவ மன்றங்கள் கூட்டம் முடிவு செய்தது
### நாவலர் பணிமன்றத்தில் இணைந்து செயற்படவும் முடிவு.

“நாவலர் பெருமானின் திருவுருவச் சிலையை நல்லூர் மணிமண்டபத்தில் அமைப்பதற்கென மக்களிடம் ஆணை பெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை சிலையை நாவலர் புகழுக்கும் பெருமைக்கும் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஒவ்வாத முறையில் உடைத்துக் கடத்தித் தனக்கு நீங்காத களங்கத்தை ஏற்படுத்திக்கொண்டுவிட்டது. ஆகவே, சபை தானாகவே மக்கள் வழங்கிய ஆணையை இழந்து விட்டது.

அதுமட்டுமல்லாமல் நாவலருக்கும் அவர் மரபுகளுக்கும் துரோகம் செய்ய உறுதியாக முடிவும் செய்துவிட்டது. எனவே, இங்கு கூடியிருக்கும் சைவ சமய மன்றங்களின் பேராளர்களாகிய நாம் எம்மை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பணி மன்றத்தின் உறுப்பினராக ஆக்கிக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் முன்னோடிகள் திட்டமிட்ட பணிகளைப் பண்டிதமணி முதலியோர் விரும்பிய வழியில் தொடர்வது என்றும் அதன் முதற் கட்டமாக மக்கள் ஆணையோடும் ஆதரவோடும் நாவலர் பெருமானின் திருப்படிமத்தை மீண்டும் நாவலர் மணி மண்டபத்துக்குக் கொண்டு வந்து உரிய முறைப்படி மீளப் பிரதிட்டை செய்வதென்றும் முடிவு செய்கிறோம்” இவ்வாறு திருநெல்வேலி கலாமன்றத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பணிமன்றத்திலே நடத்தப்பட்ட சைவ மன்றங்களின் இணைப்புக் கூட்டத்தில் ஏக மனதாக முடிவு செய்யப்பட்டது.

நாவலர் சிலையை மீளக் கொண்டுவருவதற்கு முன்னோடியாகச் சிலையை மீளக் கொண்டுவரும்படி நாவலர் சபையைக் கோரும் முடிவிற்கு ஆதரவாகப் பொதுமக்களிடம் கையொப்பம் பெறுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக் கழக இந்து மன்றத்திற்கு நாவலர் சபைச் செயலாளர் திரு. சோமகாந்தன் அனுப்பிய கடிதம் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நாவலர் சபையின் கடந்த காலச் செயல்களைக் கலந்துகொண்டோர் விளக்கிக் கூறியதோடு “சோமகாந்தன் அறிக்கை” யின் ஆணவத் தொனியும் கடுமையான கண்டனத்துக்குள்ளானது.

# சிலையை மீளக் கொண்டு வருக

### அல்லது நாவலர் காணியை மீளத் தருக.

### ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அறங்காவற் குழு கோரிக்கை

“நாவலர் பெருமானின் திருவுருவச்சிலை நல்லூர் ஆலய முன்றிலில் மணி மண்டபத்திலிருந்து அகற்றப்பட்டமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அறங்காவற் குழுவினராகிய எங்கள் மனதைப் பெரிதும் புண்படுத்தியுள்ளது; நாவலர் சிலையைத் திருப்பி அம் மண்டபத்தில் உரிய சிறப்புக்களுடன் வைத்தாலொழிய எமது கவலை மாற்றற்கரியது. ஆகவே,

( 10 ஆம் பக்கம் பார்க்க )

நாவலர் உவந்தது நல்லை மணி மண்டபமே

# சிலையை மீட்டுவர சைவ மன்றங்கள் முடிவு

நாவலர் பணி மன்றத்தின் விசேட கூட்டம் 13-8-86 இல் திருநெல்வேலியிலுள்ள கலாமன்றத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப் பல்வேறு சமய ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் சமூகந்தந்து கருத்துரை வழங்கினர். சமூகந் தந்த பலரும் நாவலர் சிலை நல்லூர்க் கந்தன் ஆலய முன்றிலில் இருக்க வேண்டியதன் அவசியம் பற்றிப் பல்வேறு பிரசுரங்களும் வந்து விட்டதை எடுத்துக் காட்டி இச்சிலையை நகர்த்துவதற்கான தீர்மானம் எவ்வாறு இயற்றப்பட்டது என்பது பற்றிப் பொது மக்களுக்கு எதுவும் தெரியாததால் அது பற்றிய உண்மைகளை மக்களுக்கு எடுத்துரைப்பது அவசியம் என்றனர்.

நாவலர் சிலையை நகர்த்துவதற்கான தீர்மானம் எடுக்கப்படுவதற்காக யாழ்ப்பாணத்தில் இயங்கும் நாவலர் சபையினர் கூட்டிய கூட்டத்தில் கலந்து கொண்ட பெரியார்கள் தாம் நேரில் கலந்து கொண்ட அக்கூட்டத்தில் பரிமாறப்பட்ட கருத்துக்களை எடுத்துக் கூறினர். இவர்களில் திருவாளர்கள் ஆர். ரி சுப்பிரமணியம், தம்பையா, அ. பஞ்சாட்சரம் ஆகியோர் அடங்குவர்,

இவர்கள் பேச்சின்சாரம் வருமாறு:

இக்கூட்டத்திற்கு முன்னரே அன்றைய ஈழநாட்டுப் பத்திரிகையில் ''நாவலர் சிலை அகற்றப்படும்'' என்ற செய்தி வெளி வந்ததெனக் கூட்டத்தில் எடுத்துக் காட்டப்பட்ட போது நாவலர் சபையின் சில முக்கியஸ்தர்கள் அது விஷமிகளின் செயலெனக் கூறிச் சமாளித்தனர். பின்னர் கூட்டம் ஆரம்பமான போது கூட்டத்தில் திரண்டிருந்த மக்களில் பெரும்பான்மையானோர் சிலை நகர்த்தல் கூடாது எனக் காரசாரமாகப் பேசினர்.

சிலை நகர்தலுக்கு ஆதரவாக ஒரு பத்திராதிபர், தமிழறிஞரான பாடசாலை அதிபர் ஆகியோர் மட்டும் பேச, ஏனையோர் இது ஒரு பாதகமான செயல் என எதிர்த்தனர். குறிப்பாக துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்கள் தமது வாழ்க்கையிலே அதிர்ச்சி தரும் சம்பவமாக இச்சிலையை நகர்த்தல் பற்றிய செய்தி அமைகிறதென்று கூறி இச்செயலை வன்மையாகக் கண்டித்தார். பின்னர் இச்சபையின் துணைத்தலைவர் பதவியையும் அவர் இராஜினாமாச் செய்தார். நாவலர் அறங்காவற் குழு உறுப்பினர் பண்டிதர் இ. திருநாவுக்கரசு அவர்கள எண்ணத்தை மிகவும் வன்மையாகக் கண்டித்தோடு நாவலர் நம்பிக்கைச் சொத்தாகிய பணிமண்டபக் காணி இச்சிலை வைப்பதற்கு மட்டுமே வழங்கப்பட்டது என்றும் கூறினர். மாநகர சபை உறுப்பினரான திரு. ஆ. துரைராசசிங்கம் அவர்கள் மிகவும் வன்மையாக இக்கருத்தைக் கண்டித்தார்.

சிலர் நாவலர் சிலையை நகர்த்தல் கூடாது என்றொரு தீர்மானத்தையும் கொண்டுவர முயன்ற போது சபைக் காரியதரிசி குறுக்கிட்டு இப்போது தீர்மானம் தேவையில்லை எனக் கூறியதாகவும் சொல்லப்பட்டது. சபைக் கூட்டம் முடிந்த பின்னர் இச்சபையின் காரியதரிசிகளில் ஒருவராகிய திருவாளர் விசுவலிங்கம் அவர்கள் கூட்டத்திற்கு வந்தோரைப் பார்த்து ''நாங்கள் சிலை நகர்த்தல் பற்றித் தீர்மானம் எடுக்கவில்லை, பயப்பட வேண்டாம்'', என்று கூறியதாகவும் கூறப்பட்டது.

இக்கலந்துரையாடலில் சமூகந்தந்தோர், ''சிலை நகர்த்தலுக்கு ஆதரவாகப் பண்டிதமணி அவர்கள் இருந்ததாக நாவலர் சபையின் முக்கிய புள்ளிகள் கூறினர்கள் இது உண்மையா?'' எனக் கேள்வி எழுப்பிய போது திரு. அ. பஞ்சாட்சரம் அவர்கள் இச்சிலையை எங்கு வைக்கவேண்டுமென்று 1967 இல் ஒரு கூட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றதென்றும் அக்கூட்டத்திற்குப் பண்டிதமணி அவர்கள் அனுப்பிய செய்தியில் நல்லூர் முருகன் வீதியே உகந்தது எனக் கூறியதையும் அன்று தொடக்கம் இறக்கும் வரையும் அக்கருத்தையே அவர் கொண்டிருந்தார் எனவும் எடுத்துக் காட்டி இதற்கு, அவர் நீதியரசர் சிவசுப்பிரமணியம் முதலியோருக்கு எழுதிய கடிதங்களும், வீரகேசரியில் வந்த கட்டுரையும் சான்று பகருகின்றன எனவும் கூறினர்.

யாழ்ப்பாணத்தில் சிலையகற்றத் தீர்மானம் மேற்கொள்ள எடுத்த முயற்சியில் தோல்வி கண்டோர் கொழும்பிலுள்ள தாய்ச் சங்கத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்ததாகக் கூறினர்கள். அத்தீர்மானத்தைக் கொண்டுவந்த இணைக்காரியதரிசிகளில் ஒருவரான விசுவலிங்கம் அவர்கள் கூட்டத்திற்குச் சமூகந்தராத நிலையில் நாவலர் சிலை நகர்த்தல் பற்றிய தீர்மானம் அங்கு ஏற்கப்பட்டது. அவரே சிலை அகற்றல் தொடர்பான தீர்மானத்தை முன்மொழிந்ததாகச் சபையின் அறிக்கை கூறுகிறது.

நாவலர் பணிமன்றத்தினர் மத்தியில் மேற்கூறிய கருத்துக்கள் பரிமாற்றம் நடைபெற்ற பின்னர் நாவலர் சபையினர் என்ன நோக்கத்திற்காக நாவலர் சபை கூட்டப்பட்டதோ அந்நோக்கத்திலிருந்து தவறிவிட்டதால் நாவலர் பணியைத் தொடருவதற்காக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பணி மன்றத்தைப் பலப்படுத்துதலே சிறந்தபணி என்ற கருத்து வெளியிடப்பட்டது.

இதன் பிரகாரம் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன:

(11 ஆம் பக்கம் பார்க்க)

**சிலையைத் திருடிய நாவலர் சபையே**

### வரப்பெற்றேம்:

# 'மில்க்வைற்' செய்தி

'Moritious is industrialising as are other Countries in Asia. Therefore it is now necessary for each individual to take his or her religion into the factories, offices and market places, thus making god's presence real and Vital in daily life''

ஹவாய் சைவாதீன முதல்வர் ஸ்ரீ சிவயசுப்பிரமணிய சுவாமி 19-?-86 இல், ''சைவத்தின் இன்றைய நிலை'' - Hinduism Today - என்ற அமெரிக்க ஆங்கில வெளியீட்டுக்கு வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். 1986 மார்ச் முதலாந் திகதி வெளியீட்டில் இக்குறிப்புக் காணவுள்ளது. தற்போது நிகழ்வது தொழில்யுகம். எல்லோரும் எந்நேரமும் தொழில்மயம். இந்நிலையிற் சமய அநுசரணைக்கு வாய்ப்பில்லையே என்று கையை விரித்து விடுவது பொதுவில் இன்றைய நிலை. தினம் 16 மணித்தியாலம் டிஸ்பென்சறியில் நான் இருக்க வேண்டும். நாவலரைப் பற்றிச் சிந்திக்க நேரமெங்கே? என்று அன்பரொருவர் அலுத்துக் கொண்டதுமுண்டு. இந்நிலையில், சுவாமிகள், 'ஏன் ஒவ்வொருவரும் தொழில் நிலையத்துக்கே சமயத்தையுங் கொண்டு செல்வது தானே. சிவ சாந்நித்தியம் எங்கும் திசழவைத்தற்கு இப்போ அதுதானே உகந்த வழி' எனக் குறிப்பிட்டிருத்தல் சுவாரஸ்யமானது.

இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன்னுகவே இச்சிந்தனைக்கு உருவங் கொடுத்து அகனைத் துடியாக நடைமுறைப்படுத்தி வருந் தொழில் ஸ்தாபனமொன்று தன்னிடமிருப்பதில் எமது யாழ்ப்பாணம் பெருமையுறுதற்கு எவ்வளவோ இடமுண்டு. 'மில்க்வைற்' என்பது யாழ். வண்ணையிலுள்ள ஒரு தொழில் ஸ்தாபனம். தொழிலுக்கமைந்த வசதிகளை விடக் கூடுதலாகச் சமய அறிவொடுக்க அநுசரணைக்காகவும் தர்ம வளர்ச்சிப் பொருட்டும் அங்கு அமைந்துள்ள பெருமளவிலான ஏற்பாடுகள் யாரையும் வியக்க வைக்கும். தொழிலதிபர், பணியாளர் அனைவரும் எந்நேரமும் வீபூதியும் சந்தனப்பொட்டும் விளங்க நிற்றல் ஒரு பசுமைக் காட்சியாகும். சமய உண்மைகள், சின்னங்கள், சமய அறிவு நூல்கள், தெய்வ சிற்பங்கள் என்பவற்றல் நிரம்பிய அத் தொழிற்சாலையின் மேல்மாடி சைவமஹிமையை உபதேசிக்கும் ஒரு உபதேச கூடமாகவே திகழ்தல் கண்கூடு. ஈழத்துச் சைவப்பிரதேசம் முழுவதிலும் இலவசமாக விநியோகித்தற்குப் போதுமான அளவு சைவ நீதிநூல்கள், பாராயண நூல்கள், விபூதிப்பைகள் போன்றவற்றுக்கு இத்தொழிற்சாலை ஒரு கருவூலமாய் அமைகிறது. அத்துடன் வாழ்வியலின் குறிக்கோளை இலகுவில் எவரும் உணரச் செய்யும் ஏற்பாடுகளும் இங்கு அதிகாதிகம். அவை எல்லாம் எழுத்தில் அடங்கா. ஆனல் ஒன்று சொல்லியாக வேண்டும். இம்மாடியில் நுழைந்தால் தான் நம் வாழ்வில் நாம் பண்ணுந் தவறுகள் நமக்கறிய வரும்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

●



யாழ். வண்ணை 'மில்க் வைற்' தொழிலதிபர் சிவநெறிப் புரவலர் திரு. க. கனகராசா அவர்கள் நாவலர் குரல் ஒலி 7, ஐ ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றத் தலைவர் திரு. மு. கந்தையாவிடம் ஏற்று ஆசீர்வதிக்கின்ருர். ''சைவத் தமிழ் ஒளி பரப்பும் திவ்விய குரலாக நாவலர் குரல் என்றும் நின்று நிலவுக'' என்பது அவர்கள் ஆசீர்வாதம்.

திரு. கனகராசா அவர்கள் நாவலர் காட்டிய சன்மார்க்க நடையிலும், அவர் வெளியிட்ட அறிவுரைகளிலும், ஏன் அதிகம்? அவர் உருவிலுந் திருவிலும் அளவிறந்த ஈடுபாடுள்ளவர். நாவலர் சைவ விஞவிடையும், நாவலர் அறிவுரைகளும், அவர் திருவுருவப் படங்களும் பெருமளவில் அச்சிட்டுச் சைவத் தமிழ் நிலமெங்தும் இலவசமாக உதவி மகிழ்பவர். தற்பொழுதும் 10,000 நாவலர் படங்களுக்கு 'ஓர்டர்' கொடுத்திருப்பதாக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்ருர்கள். தன்னியக்கமாகவே நாவலர் பணியில் தன்னடக்கமாக முன்னிற்கும் இவர் சேவையருமை போற்றத்தகும்.

## சிலையை மீண்டும் கொணர்ந்து நிறுவுக

# எல்லாம் சிவன் செயலாமே

சந்தேகமில்லை, ஆம்! எல்லாஞ் சிவன் செயல் தான். ஆனால், சிவன் நம்முடனிருந்து கொண்டு நம்மைக் கொண்டு தானே எல்லாவற்றையுஞ் செய்விக்கிறார். அவ்வளவுக்கு மட்டுமே எல்லாஞ் சிவன் செயலென்பது. அங்ஙனெனில் சிவன் சிலரைக் கொண்டு அதர்மத்தையுஞ் சிலரைக் கொண்டு தர்மத்தையுஞ் செய்விப்பதேன்? அது அவரவர் கன்ம நிலையில் வைத்து அவரவரைப் பரிபாகப்படுத்துவதற்காக. தீய கன்மப் பேறுகளை அநுபவிக்க வேண்டிய கன்மச் சூழ்நிலையுள்ளோருக்கு அதற்கேற்ற மதியைக் கொடுத்து அதற்கேற்ற சூழ்நிலையையும் உருவாக்கி அவரை அதர்மத்தில் இறக்கி விடுவார். அதற்குப் பலனாக உரிய உரிய காலத்தில் அவருக்குப் புளிக்கப் புளிக்கத் தண்டனையுங் கொடுப்பார். அதற்கெதிர், நல்ல கன்மச் சூழ்நிலையுள்ளோருக்கு அதற்கேற்ற மதியையுங் கொடுத்து அதற்கேற்ற சூழ்நிலையையும் வகுத்துத் தர்ம கைங்கரியங்களிற் பொருத்தி விடுவார். அதற்குப் பலனாக வேண்டியபடி இன்பங்களையும் வழங்குவார், எனில் இங்கே பார்த்தால் அதர்மத்தில் நிற்பவர் தானே மகிழ்ச்சியடைகிறார்கள். தர்மத்தில் நிற்போர் கஷ்டப்படுகிறார்களே!

அதர்மத்திற் பெறுஞ் சந்தோஷம் நண்டுக்காலை ஒடித்தொடித்துத் தின்னும் போது ஏற்படும் திருப்தி போல்வது. தர்மத்தில் நிற்கையில் தோன்றுங் கஷ்டம் ஊசி மருந்தேற்றுங்கால் நேரும் நோவைப் போன்றது. நண்டுண்டவர் பிறகு பிறகு கை கால் விரல்கள் பொருத்துப் பொருத்தாய் நெக்கு ஒடியும் நிலையை அடைகிற போதெல்லோ இருக்கு விஷயம். ஊசி மருந்தேற்றவர் நோய் நீங்கி இன்புறுகிறதில்லவோ இருக்கு விஷயம்.

என்ன இருந்தாலும் நன்மைப் பலன் தீமைப் பலன் இரண்டுஞ் சிவன் கொடுப்பது மலபரிபாகத்திற்காகத் தானே! அதற்கென்ன பரவாயில்லை அதர்மச் செயல்களும் நடக்கட்டுமேன்!

அது தவறு. அதர்மஞ் செய்து தீமைப்பலன் அநுபவிப்பதனால் பரிபாகம் வருதலும் மற்றதனால் பரிபாகம் வருதலும் ஒரு மாதிரியல்ல. அது ஊரொழுங்கையெல்லாம் ஒன்றும் விடாமற் சுற்றிச் சுற்றி அலுத்து வந்து வீடடைதல் போல்வது. மற்றது உரிய நேரொழுங்கையால் வீடடைதல் போல்வது அம்மட்டிலிருந்து விட்டாலும் ஓரளவு பரவாயில்லை. பின்னை என்னவென்றால், அதர்மச் செயலால் சமூகத்தில் எத்தனையோ பேர் பாதிக்கப்படுகிறார்கள். அகத்தும் புறத்தும் வேதனையடைகிறார்கள். தத்தம் கர்ம தர்மக் கடமைகளை நிறைவேற்ற முடியாமற் கஷ்டப்படுகிறார்கள். இவையெல்லாம் அதர்மத்தவருக்குப் பாவமாய் விளைந்து பிறகு எல்லாப் பாவமும் பரிபாகப்பட்டு முடிகிறதென்றால் அந்த எல்லையைப் பற்றி நினைக்கவும் முடியாது. தர்மச் செயலால் அப்படியான விக்கினம் எதுவுமில்லை. அதற்குப் பதில், எல்லார்க்கும் ஏகோபித்த இன்பமும் மகிழ்ச்சியும்.

என்றாலும் ஒருவருடைய கன்ம பரிபாகத்துக்கென்றே அவரை அதர்மச் செயலில் இறக்கிவிட்ட சிவன், அவர் செயலை மற்றவர்கள் எதிர்ப்பதையோ தடுப்பதையோ விரும்பார் தானே! அதற்கெதிர் தடுப்பவரை வெறுப்பார், சபிப்பார் என்று கூடச் சொல்லப்படுகிறதே!

அப்படிச் சாஸ்திரமுஞ் சொன்னதில்லை. அறிவறிந்த ஆன்றோருஞ் சொன்னதில்லை. அதற்கெதிர் அதர்மச் செயலைத் தடுக்கின்றவர், எதிர்க்கின்றவர் பால் சிவன் வெறுத்தற்குப் பதில் மகிழ்வார். சபித்தற்குப் பதில் வாழ்த்துவார் என்றே சாஸ்திரங்கள் சொல்கின்றன. அதை மறைத்து, தற்போதைக்குத் தப்பிக் கொண்டு தம் நலம் பார்க்கும் நோக்கில் முன் கண்டவாறு சொல்பவர்கள் அந்த அதர்மத்துக்கு உடந்தையாயிருந்த பாவத்துக்காளாகிப் பாதகர் ஆவர் என ஆறுமுகநாவலர் பெருமான் சொல்லி வைத்ததும் வேறேயுண்டு.

ஆதலால், அதர்மச் செயல்களைக் கண்டிப்பது, எதிர்ப்பது, தடுப்பது, அதற்கு மாற்று நடவடிக்கை மேற்கொள்வது என்ற காரியம் தன் நோக்கிலும் நன்மை. சமூக நோக்கிலும் நன்மை. அதர்மியாகிய அவர் நோக்கிலும் நன்மையே. எதிர்ப்பினால் தம் எடுப்புக் கைகூடாத போது அவர் தம்மிலுணர்ந்து தாமே மனமாற்றம் அடைந்து அதர்மச் செயலை இனிமேல் அடியோடு கைவிட்டுத் தர்மத்தில் தாமாகவே இறங்குவார்.

இவையொன்றையுஞ் சிந்தியாது அதர்மஞ் செய்கிறவருஞ் சுவாமி சொல்லிச் செய்கிறார்; நாம் அதற்கு எதிரிடை பண்ணினால் சுவாமி நம்மைச் சபிக்கும் என்று வாளாவிருப்பது படுகோழைத்தனம். அத்துடன், அவன் திருந்துவது சுவாமிக்கு விருப்பமில்லையென்று சுவாமி மஹிமைக்கு மாசூட்டுவதுமாம்.

க. பொ. த. உயர்தர பாடத் திட்டத்தில் 'உபநிஷத்' என்ற பகுதியும் உண்டு. அதை முன்னிட்டு மாணவர்களுக்கு உபயோகமாம் வகையில் வினு - விடை மயமாக உபநிஷதம் பற்றிய விஷயங்களைப் பிரசுரிக்கின்றது நாவலர் குரல்.

# உபநிஷதம்

## — பெயரும் தொகை, வகையும்

உபநிஷதம் என்ற பெயர்க் காரணத்தை விளக்கி அதன் தொகை வகைகளைப் பற்றி ஒரு விபரந் தருக.

வேதகால ஆத்ம ஞானிகள் தத்தம் அநுபவத்திற் கண்டுணர்ந்த ஆன்மிக அநுபவ உண்மைகளைப் பொருளாகக் கொண்ட நூல்கள் உபநிடதங்கள் எனப்படும். இந்துசமய மூலநூலாகிய வேதத்தின் முடிவான கருத்துப் பகுதிகளாக உள்ளவை இவை. அதனுல் இவை வேதாந்தம், வேதசிரஸ் எனவும் படும்.

உபநிஷத்தின் பெயர்க்காரணம் தொகை வகைகளைத் தெரிந்து கொள்ளுதற்கு முன்னேடியாக வேதம் என்பதன் சார்பிலும் சில கருத்துக்களைக் குறிப்பிட வேண்டும். வேதம் பரந்துபட்ட ஒரு பெரியநூல். அது இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வவேதம் என நால்வகைத் தொகுப்பாயுள்ளது. ஒவ்வோர் தொகுப்பிலும் பிராஹ்மணம், ஆரண்யகம், உபநிஷத் என்ற பகுதிகளுக்குரிய விஷயங்கள் உள்ளன. இவை அத்தியாயங்கள் போலத் தனித்தனிப் பிரிவுகளாக இல்லாமல் ஆங்காங்கு பார்த்து இனங்கண்டு தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டிய பாங்கில் உள்ளன.

யாகங்களின் தன்மை பற்றியும், அவை செய்யப்படும் விதிமுறைகள் பற்றியுங் கூறி, யாகங்களில் உபயோகமாகும் மந்திரங்களையும் அவற்றுக்கு அவசிய விளக்கங்களையும் உதாரணக் கதைகளையுங் கொண்டுள்ள பகுதி பிராஹ்மணம் எனப்படும், இல்லற முடிவில் வனவாசம் மேற்கொண்டிருப்போர் அநுட்டிக்கும் கிரியைகள், மந்திர உபாசனைகள் பற்றிக் கூறும் பகுதி ஆரண்யகமாகும். பொதுவாக இப்பகுதிகளில் ஆன்மா, பிரஹ்மம் என்பன பற்றிய கருத்துக்கள் விரவியும் சிறப்பாக ஆரணியகப் பகுதியில் ஆன்மிக ஞான அநுபவ உண்மைகள் நிறைந்தும் கிடக்கும். இவை உபநிஷதம் என்ற பகுதிக்குரியன.

இவையெல்லாம் ஆன்மா தனது பாசப்பற்றை அழித்துப் பிரமத்தோடு சேர்வதற்கு உபகாரமானவை. ஆதலால் அது பற்றி உபநிஷத் என்ற பெயர் ஏற்பட்டது. 'உபநிஷத்' என்ற சொல்லுக்கு ஒரு நோக்கில், அழித்தல் என்பது பொருள். உபநிஷத் என்ற பெயர்க் காரணத்தை விளக்கும் மூன்று வகைகளில் இது ஒருவகை. வாழ்வியல் மயக்கத்தால் பிரமத்தை அறியாது உணர்வுவகையால் பிரமத்திலிருந்து பிரிந்திருந்த ஆன்மா மேற்கண்டவாறு மயக்கத்துக்குக் காரணமாயிருந்த பாசப்பற்று விட்டதும் பிரமத்தை அணுகி உடனுகும். ஆதலால், அதற்குரியதைச் சொல்லும் பகுதி உபநிஷத். 'உபநிஷத்' என்ற சொல்லுக்கு மற்ருெரு நோக்கில், அணுகிக் கிட்ட இருத்தல் என்பது பொருள். இனி, குறித்த இவ்வுண்மைகள் எல்லாருக்கும் பிரசித்தமாகச் சொல்லக் கூடியன அல்ல. ஒழுக்க நடையிலும் உள்ளப் பண்பாட்டிலும் குறிக்கப்பட்ட ஓரளவு தகுதி பெற்றவர்களாய்ச் சிஷ்யராகுந் தன்மையில் ஒழுகிக் குருவை அணுகி இருப்பவர்க்கு மட்டுமே சொல்லக் கூடியன. இந்நோக்கில் அவர்கள் இரண்டு விசுதில் அணுகிக் கிட்ட இருக்கும் தன்மை உள்ளவர்களாகின்றனர். தம் உள்ளப்பண்பு குருவின் உள்ளப் பண்புக்கு அணுக்கமாக (கிட்ட) இருத்தல், சிஷ்ய முறையில் குருவைப் பிரியாது அவருக்கு அணுக்கமாக வசித்தல் என்பன அவ்விருவகைகளுமாம். இங்ஙனம் கிட்ட இருத்தல் என்ற பொருளில் 'உபநிஷத்' என்ற பெயர்க்காரணம் இருவிதத்திற் கொள்ளப்படும்.

மேற்குறித்த விளக்கப்படி நால்வேதங்களிலும் உபநிடதங்கள் உள்ளன. அவை அளவிறந்தன என்றும் பெரும் பாலானவை அழிந்தோ அழிக்கப்பட்டோ ஒழிந்து விட்டன என்றும் கூறப்படுவதுண்டு. அவற்றில் இப்போது கிடைக்கக் கூடியனவாயுள்ளவை 108. அவற்றுள் 32 உபநிடதங்கள் முக்கியமானவை என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. விபரம் வருமாறு:

இருக் வேதஞ் சார்ந்தவை:- ஐதரேய உபநிஷத், கௌஷீதகி உபநிஷத் (2)

யசுர் வேதஞ் சார்ந்தவை:- ஈச, கட, தைத்திரீய, சுவேதாஸ்வதர, பிருஹதாரண்ய, கைவல்ய, பிரஹ்ம ஜாபால, காலாக்னி ருத்ர, ஹம்ச, பரமஹம்ச, கர்ப்ப, நாராயண, அமிர்தபிந்து, அமிர்தஞான, சுபால, க்ஷுரிக, மந்திரிக உபநிஷத்துக்கள் (18)

சாம வேதஞ் சார்ந்தவை:- கேன, சாந்தோக்ய, அருணி, மைத்திராயணி, மைத்ரேயி உபநிஷத்துக்கள் (5)

அதர்வ வேதஞ் சார்ந்தவை:- முண்டக, மாண்டூக்ய, அதர்வசிரஸ், பிரசன ப்ருஹத் ஜாபால, நரசிம்மதாபினி ஆன (7)

(10 ஆம் பக்கம் பார்க்க)

சிலையினை மீட்க ஓய்வின்றி உழைப்போம்




எல்லாப் படியாலும் எண்ணிப் பார்க்கையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் திருப்படிமம் நல்லூரான் தென்வீதி மணிமண்டபத்துக்கே வந்து சேர்ந்தாக வேண்டும் என்கிறது. காசு வீசித் தரும் இசைக் கச்சேரி, பொருட் காட்சிக் கேளிக்கைகளுக் கென்றில்லாமல் சைவப் பொதுமக்கள் சுயமான ஆர்வத்துடன் தினந்தினம் வந்து, நாவலரைச் சுதந்திரமாகத் தரிசிக்க வாய்ப்பான ஒரே ஒரு சூழல் அதுவன்றி வேறில்லை.

இத்திருப்படிமத்துக்கு நிகழ்ந்த 'திடுதிப்' இடமாற்றம் அறிவியல் மேதைக் கொவ்வாதது; சைவ கௌரவத்திற் கொவ்வாதது; தமிழ் மானத்திற் கொவ்வாதது. சமூக சுபீட்சத்திற் கொவ்வாதது. நாவலர் புகழ் வரலாற்றில் 'இருட்டடிப்புக்காலம்' என இது எக்கணம் எழுதப்படவுங் கூடியது.

ஒரு சிலர் தம் சார்புக் கொள்கை (கொம்)க்கு வலுவூட்டவும், ஒரு சிலர் பண்டைப் பழம்பகை சாதிக்கவும் ஒரு சிலர் புத்தம்புது அபிலாஷைகளை நிறைவேற்றவும நாவலனுர் திருப்படிமத்தைப் பணயம் வைத்தாடியிருத்தல் பகிரங்க இரகசியம். அட அநியாயமே! இவ்வளவுக்கு இடங்கண்ட பண்டமாயிற்றே அது! என்பதைச் சிந்திக்கும் ஆற்றல் வாய்ந்த எந்த ஒருவரும் இதுபற்றி நெஞ்சம் வேவாதிருக்க நியாயமில்லை.

இது பற்றிப் பதற்றமுறுதார் போலப் பகிரங்கத்திற் காட்டிக் கொள்ளக் கற்றுள்ள சிரத்தையிலார் சிலர்கூட அந்தரங்கத்தில் அலட்டிக்கொண்டிருக்குஞ் செய்தி ஆப்தர்கள் வாயிலாக அறிய வருகின்றது. நாவலர் திருப்படிமத்துக்கு நேர்ந்த அதே கதி, அதற்குறைவிடமாயிருந்த நாவலர் தர்மசாதனக் காணிக்கும் நிகழவுள்ளதாகக் குசுகுசு குரல்கள் மூலைக்குமூலை 'மொலுமொலுத்தல் கேட்கிறதாம்: ஆனல், திருப்படிமத்தைப் போலப் பெயர்த்தெடுத்துக கடத்த இடந்தராமையாற் போலும் அதைக் கொடுத்து வாங்குதல் என்ற குயுக்தி வித்தை மூலம் கையாண்டு நாவலர் பேர் மணமும் நல்லூர் வீதியில் இல்லாமற் பண்ணிவிடத் திட்டமாமே!

இத்தனையும் நிகழப் பார்த்துக் கொண்டு, ஐயன்மீர்! எத்துக்கிருக்கின்றீர்? ஆக்கத்துக்கு வேஷம் போட்டுக் கொண்டு அழிவுக்குத் தூபம் போடும்

# நடுவு நிலை

## நாவலர் குரலின் நிலை

ஆறுமுக நாவலர் சபையை ஆசீர்வதிக்க இருக்கின்றீரா? அழைக்காத வீட்டில் அநுமதியின்றிப் புகுத்தப்பட்டு அகதிநிலைக்கிட்டு வைக்கப்பட்டிருக்கும் பாங்கும் ஆறுமுக நாவலர் மஹிமைக் கொக்கும் என்றிருக்கின்றீரா? கேட்கிறது நாவலர் குரல்!

ஆட்களுமையற்ற அநாதரவான சூனியப் பிரதேசமொன்றில் அடாத்தாகப் புகுத்தப்பட்டிருக்கிறது நாவலர் திருப்படிமம் என்ற நிலையை அன்று முதல் இன்றுவரை அநேகபிரகாரங்களினுல் எடுத்தோவித்துக்கொண்டிருக்கிறது நாவலர் குரல். நாவலர் சபையென்றுள்ளதன் உள்வீட்டுப் பிள்ளைகள் சிலர்கூட இதனை ஏற்கும் உள்ளத்தினராயிருப்பதாகப் பரவுகின்றது வதந்தி.

நாவலர் குரல் இல்லாததைச் சொல்லவில்லை; அல்லாததைக் கேட்கவில்லை; வல்வழக்குப் பேசவில்லை; பிறருரிமையொன்றைப் பலாத்காரமாகப் பிடுங்க முயலவில்லை, உண்மையில் உள்ளதைத்தான் நாவலர் குரல் சொல்கிறது; தர்மரீதியாக ஆகவேண்டியதைத்தான் கேட்கிறது; சைவமக்களுச்குச் சாஸ்வதமாக உள்ள உரிமையைத்தான் பிரகடனஞ் செய்கிறது. நாட்டில் நல்லவர் பெரியவர் என்றிருக்கக் கூடியவர்கள் அங்கீகரிக்கக் கூடிய நடுநிலை வழக்கைத்தான் பேசுகிறது, நாவலர் குரல்.

நம்ம சகோதர வெளியீடுகள் கடைப்பிடிப்பது நாதியற்ற நடுநிலைக்கொள்கை நாவலர் குரலுக்கில்லை. அவருக்கும் 'ஆம்' என்னுமல் இவருக்கும் 'ஈம்' என்னுமல் இருவருக்கும் நடுவில் நிற்பதுதான் நடுவுநிலைமையல்ல. 'நல்லதன் நலனும் தீயதன் தீமையும்' உள்ளது உள்ளபடி நாடிக் காணுதல் நடுவு நிலைமையின் முதற்கால்; கண்டுகொண்டால், பால் புளிப்பினும் பகல் இருளினும்' அக்காட்சியின் வழுவாது நன்மைக்கு உறுதியுண்டாக நிற்றல் அதன் இரண்டாங்கால்; தமது நிலையை அச்சபயமின்றி வெளிவிட்டுச் சொல்லுதல் மூன்றாங்கால். சொல்லியுங் கேளாவிடத்துச் செயலில் இறங்குதல் நாலாங்கால் இந் நாற் காலில் ஒருகால் குறையினும் நடுவுநிலைமை நடுவுநிலைமையாகாது என்பது நாவலர் குரலின் நடுவுநிலைக் கொள்கை.

நாவலர் போலவே நாவலர் குரலும் திருக்குறள் அபிமானி திருக்குறள் எடுத்துணர்த்தும் நடுவுநிலை இலக்கணத்திலேயே நாவலர் குரல் லயங்கொண்டிருக்கின்றது. திருக்குறள் என்ன சொல்கிறது. 'தகுதி என ஒன்று நன்றே'—நடுவுநிலை என்பதொன்று (எப்போதைக்கும்) நல்லது. ஆனல், அங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

**நாவலர் சபையே முடிவினை மாற்று**

# நாவலர் குரல் ஆய்வரங்கு

இலக்கண இலக்கிய விளக்க அடிப்படையிலான தமிழறிவுணர்ச்சியும் சைவத்திருமுறைப் பொருளுணர்ச்சியும் பிரயோக ரீதியான சமய வழிபாட்டுண்மை விளக்கமும் சைவத் தமிழ்க் கலாசார மலர்ச்சிக்கு இன்றியமையாதவை என்பது நாவலர் பெருமான் குறிக்கோள். அவர் பெருமளவில் மேற்கொண்டிருந்த இலக்கியப்பணி, கல்விப்பணி இரண்டினதும் தரமுந் தன்மையுங் கொண்டறியக் கிடப்பது அது. அதற்கு ஊட்டமளிக்கும் முகமாக நாவலர் குரல் ஒலி-8 பின்வரும் பிரச்சினைகளைப் பிரசுரித்து அவற்றுக்காம் ஆய்வியல் விளக்கங்களை வாசக நேயர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது. சீரான விளக்கங்கள் அடுத்துவரும் ஒலிகளிற் பிரசுரமாகும். விளக்கந் தருவோர் பற்றிய சுருக்கமான அறிமுகமும் அத்தொடர்பில் இடம்பெறும். விளக்கமளிப்போர் தயவு செய்து தத்தம் தமிழ், சைவ அறிவியல் தகைமை பற்றிய ஒரு சிறுகுறிப்பும் விளக்கப் பிரதியுடன் சேர்த்து நாவலர் குரல், ''சத்தி முற்றம்'', ஏழாலை மேற்கு, சுன்னாகம் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

1. ''கற்க கசடற...'' என்ற திருக்குறளில் 'கற்றபின்' என்பதற்குக் 'கற்றல்' எனப் பரிமேலழகர் உரை வரைந்திருப்பதற்கும், 'கல்விக்குப் பயன் அறிவும் அறிவுக்குப்பயன் ஒழுக்கமுமாம்'' என்ற நாவலர் கூற்றுக்கும் இடையிலான கருத்துத் தொடர்ச்சியைப் புலப்படுத்துக.

2. எழுத்தொலியின் தோற்றம் பற்றித் தொல்காப்பியம் கூறுவது, நன்னூல் கூறுவதிலும் அதிகமாக, அதே பற்றிச் சைவசித்தாந்தங் கூறும் விளக்கத்துக்கு அணுக்கமானது. எங்ஙனம்?

3. 'ஒண்ணுதல்' என்பது பெண்ணைக் குறித்து வரும் போது அதனைப் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை என்னாது பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை என விசேடித்துரைப்பதேன்?

4. உடலுயிர் வாழ்வை (தேரோட்டம் என) முற்றுருவகமாக வர்ணிக்குஞ் செய்யுளொன்று நாவலர் பிள்ளைத்தமிழில் உண்டு. அதே போன்ற வர்ணனையொன்று கடோபநிஷத்திலுமுண்டு. இரண்டினதும் தாரதம்மியத்தை வெளிப்படுத்துக.

5. திருமுறை ஓதுகையில் முதலிலும் முடிவிலும் 'திருச்சிற்றம்பலம்' சொல்லும் ஒழுங்கு எந்த விளக்கப் பின்னணியில் எழுந்தது?

6. இருவினைக் கோட்பாடு, நிஷ்காமிய உணர்வு, நிலை, விதியுண்மை ஆகிய சைவசித்தாந்த உண்மைகளைப் பொருளாகக் கொண்ட புறநானூற்றுச் செய்யுளொன்று தருக.

7. ''சிறுகாரோடன் பயினொடு திருத்திய' கற்போற் பிரியலம்'' என்னும் அகநானூற்றுச் செய்யுள் கொண்டு சைவசித்தாந்த அத்துவித உண்மை தமிழ்க் கலாசார விளைவு என்பதை நிறுவுமாறு யாங்ஙனம்?

8. சிவாலய அமைப்பின் அங்கமாயுள்ளவற்றிற் சிவயோக அநுபவத்திற் காணுவன எனப்படும் காட்சியம்சங்கள் சில உள அவற்றில் இரண்டினைக் குறிப்பிடுக.

9. பின்வருவனவற்றிற் காணப்படும் முரண்படு தன்மை தோற்றமளவினதன்றி (Apparently) உண்மையிலுள்ளதல்ல. எங்ஙனம்?

(அ) I. ''கற்ற அறிவாலுனைநான் கண்டவன்போல்
கூத்தாடில்
குற்றமென்றென் நெஞ்சே கொதிக்கும்
பராபரமே'' — தாயுமானவர்.

II. ''கல்லார் நெஞ்சில் நில்லானீசன்'' —சம்பந்தர்

(ஆ) I. ''அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்''
—திருமூலர்

II. ''அன்பினில் விளைந்த வாரமுதே''
—மாணிக்கவாசகர்;

10. சுவாமி உற்சவம் புறப்பட்ட பின் ஆலயத்தினுள் வழிபட, அர்ச்சனை செய்விக்க விஷயமறிந்தோர் விரும்புவதில்லை. ஏன்?

11. பின்வரும் மூன்றினுலும் ஏகோபித்துணர்த்தப் படுஞ் சைவ உண்மை யாது?

I. ''யாதேனுங் காரணத்தால் எவ்வடிவும் எத்திறமும்
மாதேயும் பாகர் இலச்சினையே''
—திருக்களிற்றுப்படியார்

II. ''படிபடு கோலத்தி னுரும் பாண்டிக்கொடுமுடி
யாரே''
—2 ஆம் திருமுறை, பாண்டிக்கொடுமுடி-6.

III. ''காதல்மடப்பிடி யோடுங் களிறு வருவன
கண்டேன்'
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன
கண்டேன்''
— நாலாந் திருமுறை, திருவையாறு-1;

12. 'இரண்டு மிலித் தனியனேற்கே' என்ற திருவாசகத் தொடர் சிவஞான போதங் கூறும் உயிரின் சிறப்பிலக்கணம் உணர நிற்கிறது; அதனைப் புலப்படுத்துக.

மக்கள் கருத்தை மதித்தே செயற்படு

நாவலர் பெருமான் 4 - 1

# நாவலரின் இரு பெரும் பணிகள்

இளமையிலேயே புலமை நலம் சிறக்கப் பெற்ற நாவலரை யாழ்ப்பாணத்து மக்களெல்லாம் தம் சமய குரவராகப் போற்றி வரத் தலைப்பட்டனர் என்பதை முன்னர் அறிந்தோம். அவர்கள் எண்ணிய வண்ணம் பழுதாகாதபடி நாவலர் வாழ்க்கை இறுதி வரையிலும் சிறந்த பணியாற்றி விளங்கிற்று என்பது பின்வரும் செய்திகளால் உறுதியாகும்.

பார்சிவல் துரையினிடம் நாவலர் தமிழாசிரியராக இருந்து வந்தாரன்றோ? அப்பொழுது அத்துரைமகனார் தம் சமயத்திற்குச் செய்து வரும் அரும்பெரும் தொண்டினைக் கண்டார். சிறுவர்களுக்குக் கல்வி புகட்டும் பள்ளிகள், ஆடவரும் பெண்டிரும் அன்புடன் சென்று வழிபாடு செய்வதற்குரிய கோவில்கள் அமைத்துச் சமய அறிவு வளர்ப்பதைக் கண்டார், குருமார்கள் ஊர்தோறும் சென்று பணியாற்றுவதையும், வேத நூலின் கருத்துக்களை ஒவ்வொருவரும் படித்துத் தம் சமய நெறி தவறாது ஒழுகச் சிறு நூல் வடிவில் உதவி வருதலையுங் கண்டார். புத்த, இஸ்லாமிய சமயத்தவர்களும் தத்தம் சமய ஒழுக்கங் குறையாதபடி தொண்டில் முனைந்து நிற்பதையுங் கண்டார். ஆனால், சிவ சமயத்தவர்கள் தம் மொழி, சமயம் இரண்டையும் பற்றிக் கவலை கொள்ளாத இழிநிலையையும் கண்டார். தமிழும் சமயமும் தாழ்வுற்றுக் கிடக்கும் நிலைகண்டு இரங்கினார். அம்மக்களின் சூது நிறைந்த சுருங்கிய உள்ளத்தையும் அறிந்தார். இந்தநிலை நீடிக்குமானால் அழிவே வந்து சேரும். ஆகவே, இப்புல்லிய நிலையினை மாற்றிப் புதுநிலை தேட வேண்டுமென்று உறுதி கொண்டார்! அந்த உறுதியே பார்சிவல் துரையிடத்து அலுவல் பார்ப்பதினின்றும் விலகக் காரணமாயிற்று. நாவலர் இரண்டு பெரிய குறிக்கோள்களைத் தம் இளம பருவத்திலே உருவாக்கிக் கொண்டார். தமிழன் என்ற பெருமையோடு தலைநிமிர்ந்து வாழ வைக்கும் தாய்மொழி வளர்த்தலும், இம்மை மறுமைப் பயன்களை நல்கும் சமயத்தைக் காத்தலும் ஆகிய குறிக்கோள்கள் இரண்டுமேயாம். இவற்றைத் தவிர வேறொன்றையும் வைக்க அவருள்ளம் இடந்தரவில்லை. "தமிழ். சமயம் ஆகிய இரண்டும் என் இரு கண்கள்; அவ்விரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்துப் பயன் கொள்வதே என் கடன். அவை வாழப் பணிபுரிதலே என் வாழ்வின் குறிக்கோள்," என்று தன்னைத் துறக்கும் முறுகிய நிலைக்கு வந்துவிட வேண்டியதாயிற்று! இவ்வாறு துணிவதற்குக் காரணமாயிருந்த கால நிலையினைக் காண்போம்.

நாவலர் வாழ்ந்த காலம் ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த காலமாகும், அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் புலமையுடைய புலவர்கள் பலர் வாழ்ந்து வந்தனர். சிவநெடு நின்றொழுகும் சமயப் பெரியார்களும் வாழ்ந்தனர். ஆனால் மொழி, சமயம் இரண்டையும் தனித்தனியாக ஆக்கிக் கொண்டார்களேயல்லாமல் மக்கட்குப் பயன்படுத்தும் பெருநோக்கம் கொண்டார்களில்லை. தாம் கற்றவற்றையும் தம் மைந்தர்க்கும் சொல்லாது மறைத்து ஒழுகி வந்தவர் சிலர். கிடைத்தற்கரிய ஏட்டுச் சுவடிகளை இரவலாகப் பெற்று எழுதிக் கொள்வதும் பிழை படுத்தி அதன் தூய்மைகெடுத்து அறியாதார் போன்று திரும்பச் சேர்ப்பவர் சிலர். ஒருவர் தாம் கல்வி கற்ற காலத்தில் எழுதி வைத்திருந்த சிறந்த குறிப்புக்களைத் தாமொருவரே பயன்படுத்திக் கொண்டார். அதன்பின் அந்நூற் குறிப்புக்கள் யாவற்றையும் உறவினர்களால் கொணருமாறு பணித்தார். தாம் நோய்வாய்ப்பட்டிருந்தால் அவற்றைத் தன் முன்னே குவிக்கச் செய்து எரியூட்டினார். அவ்வேடுகள் முழுவதும் எரிந்து சாம்பலானதைக் கண்ட பின்னரே உயிர் துறந்தார். இந்த நிகழ்ச்சியொன்றே நாவலர் காலத்து மக்களின் மனநிலையை அறியப் போதுமன்றோ? இந்நிலையில் மக்களிடத்தில் தமிழார்வமோ சமயவுணர்வோ எள்ளளவேனும் இருந்திருக்குமோ? இப்படிப்பட்ட காலமே நம் நாவலர் பெருமான் பிறந்து வாழ்ந்த காலம். அதனாலேயே தம் வாழ்வைத் தமிழும் சைவமும் தழைத் தோங்குவதற்குத் துறந்து விட முடிவு செய்தார். அவ்வாறு செய்த முடிவு எவ்வாறு நிறைவேறியது?

மொழி என்பது நாட்டின் வளர்ச்சியையும் மக்களின் நாகரிகத்தையும் உணர்த்தும் கருவியாகும். அந்த உண்மையை நன்கு அறிந்தவர் நம் நாவலராவர். அக்காலத்தே வீழ்ச்சியுற்றுக் கிடந்த யாழ்ப்பாண மக்களை எழுச்சிபெறச் செய்யவல்ல கருவி தமிழ் மொழியையன்றி வேறில்லை எனத் தேர்ந்து தெளிந்தார். ஒவ்வொருவருள்ளத்திலும் தமிழ் ஆர்வம் எழச் செய்ய வேண்டுமென்ற கருத்துக் கொண்டார். மக்களிடம் மொழியுணர்ச்சியையுண்டாக்கி விட்டால், சமயக் கருத்துக்களைத் தூவி எளிதில் பயன்பெறச் செய்யலாம் என்று பலகால் சிந்தித்து வந்தார். அச்சிந்தனையின் முடிவே யாழ்ப்பாணமெங்கும் தமிழ்ப்பள்ளிகள் தோற்றுவிக்க வேண்டுமென்று கருதியதாம், அக்கருத்து அப்பொழுதிருந்த காலநிலையில் ஒன்றும் செய்யவியலாதவாறு அடங்கிவிட்டது. ஆகவே, தாமே ஓரிடத்தில் சில மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கத் தொடங்கினார். தம்பால் கல்வி பயிலவரும் மாணவர் வசதியையே கருதி இரவு பகலாகப் பாடங்களைப் போதித்து வந்தார். கைம்மாறாக எவ்வுதவியும் பெறாமல் சில ஆண்டுகள் உழைத்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்

**நாவலர் சபையே புனித இடத்தில் புனிதனைக் கொணர்ந்துவை**

கது. சங்க நூல்களில் தலைசிறந்த திருக்குறளையும், நன்னூல், நிகண்டு முதலிய இலக்கண நூல்களையும் பெரிய புராணம் முதலிய பக்தி நூல்களையும், தம்பால் பயின்ற மாணவர்கட்கு விளக்கமாகக் கற்பித்து வந்தார். அவர்பால் பயின்ற மாணவர்கள் சிலரேயாயினும், தமிழார்வ மிகுந்து, சமயவொழுக்கம் சிறந்து பெருந்தன்மையுடையவர்களாக விளங்குமாறு செய்தார். அதனை நினைக்கும்போது நாவலர்தம் தமிழார்வத்தை இனைத்தென்று சுட்டுதல் எளிதோ? அப்பேரார்வம் பழங்காலப் புலவர் பெருமக்களின் அடிச்சுவட்டிலேதான் வந்திருக்க முடியும் என்பதற்கு ஐயமுண்டோ?

நாவலர் தம் குறிக்கோள்களில் முதன்மையாகக் கொண்டது தமிழ்ப் பணி என்பதை முன்னர்க் கண்டோம். அந்த எண்ணம் பள்ளிப் பருவத்திலேயே கருக்கொண்டிருந்தது என்பதைக் காணலாம். தமிழ்க் கல்வி கற்று முடிந்தபின் நாவலர் பார்சிவல் துரைமகனாரின் ஆங்கிலப் பள்ளியில் பயிலச் சென்றார். அந்நாளில் யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் தமிழ்ப் பள்ளிகள் நடைபெற்றன. அவற்றின் நிலை மிகவும் இரங்குதற்குரியது. மாணவர்கள் தம் ஆசிரியர்களுக்குக் கற்பிப்பதற்குரிய சிறு தொகையாகிய ஊதியமும் கொடுக்க முடியாத பொருள் முட்டுப்பாடான காலம். ஆசிரியர்கள் தங்கள் புலமையை யாவருக்கும் பயன்படுத்தாது மறைத்து ஒழுகும் தன்மையும் நிலவிய காலம். மாணவர்கள் பயில்வதற்கும் தமிழ்ச் சுவடிகள் கிடைக்கப்பெறாது அலைந்து வருந்தும்படியான காலம். அத்தகைய காலத்துத் தமிழைக் கற்றவர்களும் சமயத் தலைவர்களும் வாழ்ந்தனர். எனினும், மேற்கண்ட குறைகளைப் போக்க முயலாது வாளாவிருந்தனர். இந்நிலையில், அழகிய நூல்களை அச்சிட்டு மாணவர்க்களித்து, ஆசிரியர்களுக்குத் தக்க ஊதியம் ஈந்து உயர்ந்த பதவிகளில் அமரச் செய்துவரும் அத்துரைமகனாரையும் அவர்தம் சமயத் தொண்டர்களையும் கண்டார். அப்பொழுது நாவலர்க்குப் பதினாறு வயதும் நிரம்பவில்லை. தமிழும் சமயமும் காப்பாரில்லாமல் தாயிழந்த சேய்களைப்போல ஒளி குன்றிக் காணப்படும் நிலை அவருள்ளத்தைத் தொட்டது! என் செய்வார்! பள்ளியில் பயிலும் இளைஞர் இறைவனை நினைந்தார். தமிழும் சமயமும் தழைக்க அருள் செய்யுமாறு ஒரு வெண்பாப் புனைந்தார். அதனையே அன்புக் காணிக்கையாகப் படைத்தார். இந்த நிகழ்ச்சி அவரது இளமை யார்வத்தைப் புலப்படுத்துகின்றதன்றோ?...

1845-ஆம் ஆண்டிலே நாவலர் இலவசமாகக் கற்றுக் கொடுக்கும் தமிழ்ப்பணியை மேற்கொண்டாரல்லவா? அவ்வாறு மேற்கொண்ட முதல் முயற்சியிலேயே வெற்றி கண்டார் என்பதை அவர்பால் பயின்று புலமை பெற்ற மாணவர்களாலே அறியலாம். அதுவேயுமல்லாமல், அவர்களும் தாமின்புறுவது உலகின்புறக் கண்டு காமுறும் கற்றறிந்தோராயினர் என்பதும் ஈண்டுக் கருதத்தக்கது. நாவலரிடத்து ஒன்றியிருப்பதே பெறும் பேறு எனக் கருதிய மாணவர் சதாசிவம்பிள்ளையவர்கள் தொண்டிற்காக இல்லற வாழ்வைத் துறந்தவர்; நாவலரால் தோற்றுவிக்கப்பட்ட சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற கல்விக்கூடத்தை வளர்த்துப் புகழ் கொண்டவர். நூல்கள் பலவற்றை அச்சேற்றறித் தமிழகத்தில் பரப்பியவர். நாவலர் மறைந்த பின்னும் முப்பதாண்டுகள் வாழ்ந்து ஒப்பிலாப் பணியாற்றியவர். நாவலருக்குச் செயல் வீரர் ஒருவர் உண்டெனில், அவர் இவரேயாம்! ஒரு மாணவர், சித்தாந்த நூல்களையும் வடமொழி நூல்களையும் ஒருங்கே கற்றுப் புலமையிற் சிறந்தவர். பின்னாளில் பல மாணவர்கட்குச் சித்தாந்தப் பயிற்சியும் யோகப் பயிற்சியும் அளிக்கும் புகழ்மிக்க பேராசிரியராக விளங்கினர். ஒருவர் திருவண்ணாமலை யாதீனத் தம்பிரானாகித் தொண்டர்கள் பெருமையைத் தண்டமிழ்ப் பாக்களால் விரித்துரைக்கும் சேக்கிழார் புராணத்திற்கு எவரும் வெளியிடாத ஒரு சிறந்த உரை வரைந்து புகழ் கொண்டார். ஒருவர், தமிழ் இலக்கிய இலக்கணங்களை நுணுகி யாய்ந்து, புராண காவியங்களைக் காட்டுவதில் நாவலருக்கு இணையாக விளங்கினர். நாவலரின் சொல்வன்மைத் திறனெலாம் எய்திய சொல்லின் செல்வர் எனலாம். ஒருவர், யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற கல்வி நிலையத்தில் பல்லாண்டுகள் தலைமையாசிரியராகவிருந்து புகழ் தேடிக் கொண்டவர். இப்படிப்பட்ட சிறந்த மாணாக்கர்களை உருவாக்கும் பொறுப்பை மேற்கொண்டவரன்றோ நம் நாவலர்? நாட்டினைக் காக்கும் கண்மணிகளாகிய மாணவர்களை உருவாக்கும் பொறுப்புடையார் யார்? அறிவு ஒழுக்கங்களிலே சிறந்து பயன் கருதாதுழைக்கும் பெருமக்களாகிய நல்லாசிரியர்களன்றோ? நல்லாசிரியர்கள் இல்லா நாடு நாடாகுமோ?

(11 ஆம் பக்கம் பார்க்க)

## வரப்பெற்,,.. (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இகே ஸ்தாபனத்தின் வெளியீடாக உள்ள மில்க்வைற் செய்தி இதழ் 127 வரப்பெற்றோம். உள்ளத்தில் உள்ளதே குரலில் வரும் என்ற உண்மைக்கிணங்க இது 'மில்க்வைற் குரல்' என்ற 'நாவலர் குரல்' மதிப்பிடுகிறது. தொழில் நிலையத்திற் காண்பனவற்றுக்கு முற்றிலும் அநுகூணமான கருத்துப் புகையல்களால் நிரம்பியிருப்பது இவ்வெளியீட்டின் மகிமையாகும். பாலர் முதல் வயோதிபர் வரை கல்வி, கலை, கலாசாரம், சன்மார்க்க நடை, சிக்கன வாழ்வு, ஆரோக்கியம், தேசபக்தி, பொருளாதார விருத்தி என்பன பற்றித் தெளிவாக அறிந்து பலனடைதற்குரிய சாதனங்கள் தொழில் நிலையத்திலுண்டு. அவை பற்றிய தகவல்களெல்லாம் இவ்வெளியீட்டிலுமுண்டு. இவ்வகையில் இவ்வெளியீடு சிறிய அளவிற் பெரிய சேவை புரியும் ஒரு பரோபகாரி எனல் தகும். சைவ தர்ம சமூக விருத்தி சாதனங்களாயுள்ள 'மில்க்வைற்' அன்பளிப்புக்கள் ஈழத்துச் சைவத் தமிழர் வாழும் பிரதேசங்களின் மூலை முடுக்கெல்லாம் இலவசமாகவே சென்று சேர்வது போல இம் மில்க்வைற் செய்தியும் அங்கங்கெல்லாம் இலவசமாகவே சென்று சேரும் பாங்கு குறிப்பிடத்தகும். 1975 இல் ஆரம்பமான இவ் வெளியீடு கால எல்லை கடந்து தொடர்ந்து வெளிவர வாழ்த்துகிறோம்.

## உபநிஷதம் (5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வவ் வேதங்களிலிருந்து அவ்வவற்றின் உபநிடதப் பகுதிகளைத் தெரிந்தெடுத்தவர்கள், அவ்வவற்றின் பொருள் இயல்பு பற்றியும், சம்பந்தப்பட்ட குரு சிஷ்யர்களின் பெயர் சார்பிலும் அவ்வவற்றுக்குப் பெயரிட்டிருக்கிறார்கள்.

முக்கிய உபநிடதங்கள் எவை என்பது ஆராய்ச்சியாளரின் நோக்கிற் கேற்பத் தொகை வேறுபடக் கொள்ளப்படுவதுமுண்டு. மேல் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் சிலர் இவற்றில் பத்து மாத்திரம் அடிப்படை முக்கியத்துவம் உள்ளன என்பர். ஏனையோர் 12, 13 என வேறுபடவுங் கொள்வர். சங்கராசாரியர் ஈச, கேன, கட, பிரச்ன, முண்டக, தைத்ரீய, ஐதரேய, சுவேதாஸ்வதர, பிருஹதாரண்யக, சாந்தோக்ய, மாண்டூக்ய, அதர்வசிரஸ், அதர்வசிகை என்ற 13 உபநிஷதங்களை முக்கியமாகக் கொண்டு வேதாந்த பரமாக உரை விளக்கஞ் செய்துள்ளார். ஆங்கில அறிஞரான மாக்ஸ் முல்லர் (மோக்ஷ மூலர்) இவற்றில் முதற் பத்துடன் கௌஷீதகியையுஞ் சேர்த்து இப்பதினொன்றுந்தான் உத்தமத் தன்மையான (Classical) உபநிஷத்துக்கள் என்றுள்ளார். சிவஞான மாபாடியம் எழுதிய சிவஞானமுனிவர் கைவல்யம், அதர்வசிரஸ், அதர்வசிகை, சுவேதாஸ்வதரம் என்ற நான்கையும் மஹா முக்கியமெனக் கொண்டுள்ளார். இந்நான்குடன் காலாச்னி ருத்ர உபநிஷத்தையுஞ் சேர்த்துப் 'பஞ்சருத்திரம்' எனக் கொண்டு சைவசித்தாந்த உண்மை விளக்கத்துக்கு இவை மிக முக்கியமானவை என்ற கருதுநிலையும் உண்டு. இவ்வைந்துடன் பஞ்ச ஜாபால உபநிஷதங்களையுங் கூட்டி அப்பத்தும் சைவ சமயத்தவரின் நித்திய பாராயணத்துக்குரியன என்பதும் உண்டு. (வளரும்)

## நடுவுநிலை (6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குஞ் சாராமல் இங்குஞ் சாராமல் மதில்மேற் பூனை போல், தற்போதைக்குத் தப்பும் முகாந்திரமாக இருக்கப்பெறுதலாலன்று. பின்னை எதனாலெனில், பகுதியால்—பாற்பட்டு—ஒழுகப் பெறுதலால்— சரிபிழைப் பகுதியை அறிந்து சரியின் பாற்பட்டு அது நிலைபெறும் வழியில் ஒழுகுதலால் என்கின்றது திருக்குறள்.

குறித்த நாவலர் திரும்படிம விஷயத்தில், செயலின் பிழையைக் கண்டறிய வேண்டும். அறிந்த அறிவுக்கு இரண்டகம் பண்ணித் தன்னைத்தான் ஏமாற்றிவிடாமல் சரியைச்சார்ந்து, யார் மருட்டினாலும் எவர் வெருட்டினாலும் மற்றெவர் மிரட்டினாலும் அசையாது நிற்க வேண்டும், சரி எது எனபதைப் பகிரங்கமாகச் சொல்ல வேண்டும். சொல்லியுங் கேளாதபோது செயலில் இறங்கச் சர்வபாவங்களாலுந் தயாராயிருக்க வேண்டும். இவற்றுக்காம் உணர்வை யூட்டுவது நாவலர் குரலின் பணி. சகோதர வெளியீடுகளின் நிலைக்கு நேரெதிர் நாவலர் குரலின் நடுவுநிலைமை இதுவாகும்.

## சைவ சேனாபதி வருக!

தெய்வ ஞான வாள்முனையில்
தெவ்வு முனைகள் சிதைந்தழியத்
திருவெண் ணீற்றுக் கவசமிட்டுத்
திடசங் கற்பக் கச்சிறுக்கும்
சைவ சேனா பதிவருக
சைவா தீனத் தலைவரெலாந்
தம்மிற் பரிந்து விருந்தெதிர் கொள்
தகவே வருக தமிழுலகம்
உய்வ தறிந்து கடைப்பிடிக்கும்
உபாயந் தழுவி யிரவுபகல்
ஓவா துழைக்கும் உழைப்புயர்வின்
உச்ச வரம்பே வருகபணி
செய்வ தனைத்துஞ் சிவார்ப்பணமாச்
செய்வோய் வருக வருகவே
தெய்வம் மடிதற் றெழக்குடிசெய்
திறலோய் வருக வருகவே.

— நாவலர் பிள்ளைத் தமிழ்

## சிலையை மீளக்.., (1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாவலர் சபையினர் சைவ, தமிழ் மக்களது கருத்துக்கு மதிப்பளித்து நாவரின் திருவுருவச் சிலையைத் தக்க மரியாதைகளுடன் கொண்டு வந்து மீண்டும் நல்லூர்க் கந்தன் திருவீதியில் அமைந்த நாவலர் மணிமண்டபத்தில் வைக்க வேண்டும்."

— இவ்வாறு 24-7-86 இல் யாழ். கல்வித் திணைக்களத்தில் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அறங்காவற்குழுக் கூட்டத்தில் ஒரு முகமாக முடிவு செய்யப்பட்டது,

"நாவலர் அறங்காவற்குழுவுக்குரிய காணி நாவலர் பெருமானின் சிலை வைப்பதற்கென்றே பெறப்பட்டது. இப்போது காணி அந்நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படாதிருப்பதனால் காணியை நாவலர் அறங்காவற் குழுவிடம் மீள ஒப்படைக்கப்படவேண்டும்" எனவும் பிறிதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்விரு தீர்மானங்களும் நாவலர் சபைக்கு விரைவில் உரிய முறையில் அனுப்பப்படுமென நாவலர் அறங்காவற் குழுவினர் தெரிவித்தனர்.

இவ்வறங்காவற் குழுவில் கல்விப் பணிப்பாளர், பிரதம கவ்வி அதிகாரி (கல்வி நிர்வாகம்), யாழ்ப்பாண வட்டாரக் கல்வி அதிகாரி, அறங்காவற் குழுச் செயலரும், வண்ணை நாவலர் மகாவித்தியாலய அதிபருமான திரு. சிவஞானசுப்பிரமணியம், பண்டிதர், வித்துவான் இ. திருநாவுக்கரசு, திரு. அ. பஞ்சாட்சரம் முதலியோர் உறுப்பினராக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**நாவலர் சபையே பாட்டும் காட்சியும் பாவம் போக்கா**

# சிலையை மீட்க உறுதி செய்யும் கூட்டம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பணிமன்ற நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் 1984 . 08 . 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 . 00 மணிக்கு பணிமன்றத் தலைவர் பண்டிதர் மு. கந்தையா அவர்கள் தலைமையில் திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள கலாமன்ற மண்டபத்தில் நடைபெறும்.

நாவலர் பெருமானின் திருப்படிமத்தை மீண்டும் நல்லை முருகன் ஆலய வீதியிலுள்ள மணிமண்டபத்தில் நிறுவ உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயாராகவுள்ள சைவத் தமிழ் அன்பர்கள் அனைவரையும் இக்கூட்டத்திற் கலந்து கொள்ளுமாறும் சிலையை மீள மணிமண்டபத்திற்குக் கொண்டுவர மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை வழங்குமாறும் பணிமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது

நாவலர் பெருமான் சிலையை அகற்றுவது பற்றி ஆராய நாவலர் சபை கூட்டிய கூட்டத்தில் சிலை எடுப்பதைக் கண்டித்து உரையாற்றியவர்களும்சிலையை அகற்றக் கூடாது என்ற பிரேரணையைக் கொண்டு வந்தவர்களும் அக்கூட்டத்தில் நடந்தவை பற்றிப் பொது மக்களுக்கு முழுமையாக விளக்கிக் கூறுவார்கள்.

சைவ மன்றங்களின் பேராளர்கள் தம்மை நாவலர் பணி மன்றத்தில் இணைத்துக் கொண்டு சிலையை மீட்கப் போராடுவது என்று முடிவு செய்த பின் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் பொது மக்களைக் கூட்டி நாவலர் சிலை அகற்றல் தொடர்பான பிரச்சினைகளை விளக்குவதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது. 1986. ८8. 20 ஆம் திகதி புதன்கிழமை திருநெல்வேலி கலா மன்றத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

கடந்த ஓராண்டு காலமாக மகஜர்கள் மூலமும் பேச்சுக்கள் மூலமும் ஈழத்தின் சைவ மன்றங்கள் சிலையை மீளக் கொண்டு வரும்படி நாவலர் சபைக்கு விடுத்த வேண்டுகோள்கள் அனைத்தையும் நாவலர் சபை உதாசீனம் செய்து விட்டது. இம் மன்றங்கள், சபைகளுக்கு நாவலர் சபை பதிலளிக்கத் தவறி விட்டது.

எனினும் சைவ மன்றங்கள், சைவப் பொது மக்கள் தமிழ் கூறும் நல்லுலகு ஆகிய அனைத்துக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றத்தினூடாக நாவலர் சபை ''சிலையை மீட்க முடியாது'' என்று ஆணவத்தோடு பதிலளித்து விட்டது.

பல்கலைக்கழக இளைஞர்களுக்கு அளிக்கப்பட்ட இப்பதில் நாவலர் மீது அன்பும் பக்தியும் பெருமதிப்பும் கொண்ட அனைவரையும் அவமதிப்பதாகவும் புண்படுத்துவதாகவும் அமைந்து விட்டது. நாவலர் சபையை வேண்டுகோள்கள், மகஜர்கள் மூலம் மனமாற்றம் செய்ய முடியாது என்றநிலை தெளிவாகி விட்டது.

இந்த நிலையில் தான் மன்றங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் விளைவாகவே 24. 8. 86 இல் நாவலர் பணி மன்றம் பொது மக்களைக் கூட்டி விளக்கமளிக்க முடிவு செய்துள்ளது.

இமாலயத்தவறு ஒன்று நாவலர் சபையால் செய்யப்பட்டது. நாவலர் சபையின் இன்றைய ஆணவ அலுவலர்களைச் சமூக எதிரிகள் என ஒதுக்கி விட்டு நாவலர் திருப்படிமத்தை மீட்க அனைவரும் ஓரணியில் திரள்வது அவசியம், பண்பாட்டுப் படுகொலைகளுக்கு எதிரான போராட்டம் மிகவும் முக்கியமாகும்.

## சிலையை மீட்டு வர

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(1) நாவலர் சிலையை மீள நல்லூர் முருகன்வீதி மணிமண்டபத்தில் நிறுவுதல்,

(2) இந்த நடவடிக்கைக்கு மக்கள் ஆதரவைத் திரட்டல்.

(3) நாவலர் பணிமன்றத்தின் நிருவாகக் குழுவைப் பலமானதாக்கி இம்மன்றத்தினூடாக நாவலர் பணியைத் தொடர உழைத்தல்.

(4) நாவலர் குரலை மக்கள் மத்தியில் எளிதாகச் சென்றடையக்கூடிய ஒரு பத்திரிகையாக வெளியிடுதல்.

## நாவலர் பெருமான்

( 9 ஆம் பக்கத் தொடர்ச்சி )

நாட்டின்மீது நாட்டங்கொண்ட நாவலர் சில மாணவர்களை உருவாக்கியதோடு நிற்பாரோ? இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றுள்ளார் என்று உரைக்கும் நிலை எய்தல் வேண்டும். அவ்வாறு எய்து மேல் துன்பங்கள் நீங்கும்; நலம் பெருகும்; தூய்மையுண்டாகும்; நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம் என்ற வீரம் பிறக்கும். தமிழையும் சமயத்தையும் வளர்க்க முந்துவர் என்று கருதினர். ''ஒருவர் கூடத் தமிழ்க் கல்வி பெறவில்லை என்ற நிலை இருத்தல் கூடாது. நம்மிலே ஒருவன் உயர்நிலை அடைகின்ற போது, அவ்வுயர் நிலையினைத் தாம் பெற்றதாகக் கருதி மகிழ்ந்து பாராட்டுகின்றோம். அப்படிப்பட்ட நாம், நம்மிலே ஒருவன் ஏழ்மை காரணமாகவோ பிற காரணத்தாலோ கல்வி பெறாமல் இருப்பின் நாம் அத்துணை பேரும் அதற்காகத் தலை குனியும்படியான உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். அந்த நிலையை உண்டாக்கும் நாள் எந்நாளோ?'' எனச் சிந்தித்துக் கொண்டேயிருந்தார். (வளரும்)

**சிலையை மீட்டு வை பாவம் துடைத்து நில்**

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின்

# திருப்படிமம் மீள வராது

"நாவலர் கலாசார மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள நாவலர் பெருமானின் சிலையை மீண்டும் நல்லூர் மண்டபத்தில் கொண்டு வந்து வைக்க வேண்டும் என்பதைச் சபையால் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் இது விஷயமாகக் கடந்த காலத்தில் சபை நன்கு ஆராய்ந்து ஆலோசித்து எடுத்த சரியான முடிவுகளில் மாற்றமெதுவும் செய்யத் தேவையில்லையெனவும் ஆட்சிக்குழு திட்டவட்டமாகக் கருதுகின்றது".

—இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் ஆட்சிக்குழு ஆணைப்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றச் செயலாளருக்கு அச் சபையின் இணைச் செயலாளர்களுள் ஒருவராகிய திரு. நா. சோமகாந்தன் எழுதியுள்ளார். சிலையை நல்லூர் மணிமண்டபத்தில் மீள நிறுவும் படியும் அவ்வாறு செய்ய முடியாவிட்டால் தாம் அதனை மீளக் கொண்டுவர உதவுவதாகவும் இந்து மன்றத்தினர் கூறியிருந்தனர்.

மிக நீண்ட காலத்துக்குப்பின் நாவலர் சபையினர் எழுதியுள்ள பதில் மிகுந்த ஆணவத்தோடு அமைந்துள்ளது. இவ்வறிக்கையை வெளியிட யாழ்ப்பாணத்தில் வெளியாகும் பத்திரிகைகள் மறுத்துவிட்டதால் பல்கலைக் கழக இந்து மன்றத்தினர் அதனை நாவலர் குரலுக்கு அனுப்பி வைத்துள்ளனர். அக்கடிதத்தை இங்கு வெளியிடுகிறோம்.

"வணக்கம்! தங்கள் மன்றத்தினால் எமது சபையின் தலைவருக்கு (முன்னாள் நீதியரசர் எச். டபிள்யூ தம்பையா) அனுப்பப்பட்ட கடிதத்தினையும் அதனைத் தொடர்ந்து தங்கள் மன்றப் பிரதிநிதிகள் எமது இணைச் செயலாளரைச் சந்தித்து ஆட்சிக்குழுவுடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொண்டதனையும் சபையின் ஆட்சிக்குழு பரிசீலனை செய்தது. பின்வருவனவற்றைத் தங்களுக்கு அறிவிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாவலர் கலாசார மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள நாவலர் பெருமானின் சிலையை மீண்டும் நல்லூர் மணிமண்டபத்தில் கொண்டு வந்து வைக்க வேண்டும் என்பதைச் சபையால் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் இது விஷயமாக கடந்த காலத்தில் சபை நன்கு ஆராய்ந்து ஆலோசித்து எடுத்த சரியான முடிவுகளில் மாற்றமெதுவும் செய்யத் தேவையில்லையெனவும் ஆட்சிக்குழு திட்டவட்டமாகக் கருதுகின்றது".

தங்கள் மன்றம் இப்போது சிலையமைந்துள்ள இடத்தை மேலும் புனிதப்படுத்துவதற்கான முயற்சிகள், நாவலர் கீர்த்தியைப் பரப்புவதற்கான வழிவகைகள், பொதுவான சைவசமய வளர்ச்சி போன்றவை பற்றிய ஆலோசனைகளைத் தெரிவிக்க விரும்பினால் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். அவ்வாறெனில் கலந்துரையாட வேண்டிய விஷயத்தைக் குறிப்பிட்டுத் தங்கள் மறுமொழியைத் தருக".

இவ்வாறு திரு. சோமகாந்தன் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

துரோகத்துக்குத் துணைபோகும்படி திரு. சோமகாந்தன் விடுத்த அழைப்பை முற்றாக நிராகரிப்ப

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் ஆணவ அறிக்கை

தென்றும் நாவலர் சபையினரை முடிவை மாற்றியமைத்து அவர்களே சிலையை மணிமண்டபத்திற்கு மீளக் கொண்டு வரும் வகையில் பொது மக்களை ஓரணியில் திரட்டி நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதெனப் பல்கலைக் கழக இந்து மன்றம் முடிவு செய்துள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் நாவலர் குரல் ஆசிரியருக்குத் தெரிவித்துள்ளார்.

"நாவலர் பெருமானின் சிலை நல்லூர் முருகன் முன்றிலில் அமைந்த மணி மண்டபத்தில் ஆகம முறைப்படி பிரதிட்டை செய்து வழிபடப்பட்டது. அது ஆகம விரோதிகளால் களங்கப்படுத்தப்பட்டுள்ளது. இருக்க வேண்டிய இடத்தில்லாது வேறிடத்தில் இருப்பது புனிதமற்றதாகும். சிலை இன்று இருக்குமிடத்தில் புனிதம் பெற முடியாது. எனவே இப்போது சிலையையோ அது அமைந்துள்ள இடத்தையோ புனிதமாக்கும் முயற்சி வீண் முயற்சியே. பல்கலைக்கழக இந்து மன்றம் இதில் தொடர்புபடாது. நாவலர் சபையினர் தம்மைப் புனிதப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். சிலையை அதற்குரிய இடத்தில் மீளப் பிரதிட்டை செய்வதன் மூலமே அவர்கள் கூடத் தமது களங்கத்தைப் போக்கிப் புனிதம் அடைய முடியும். அதை அவர்களே செய்ய முடியும். ஆணவம் எளிதில் அடங்காது. ஆனால் அடங்கியே தீரும்" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

திரு நா. சோமகாந்தன் தம்மைப் புனிதப்படுத்த எழுதியுள்ள கடிதத்தில் தமது முடிவுக்குச் சாட்சிகளாகப் பின்வருவோரைக் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் அனைவரும் துரோகத்தின் துணைவர்களா? என்பதை விசாரிப்பது சைவ, தமிழ் உலகின் பொறுப்பாகும். ஆணவத்தோடு பதிலளிக்கும்படி தமக்கு ஆணையிட்டவர்கள் எனத் திரு. சோமகாந்தன் கூறுவோர் பட்டியல் இதோ:

பேராசிரியர். எச். டபிள்யூ. தம்பையா,
(முன்னாள் நீதியரசர்)
பேராசிரியர் சு. வித்தியானந்தன்,
(துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்)
எஸ். கனகரத்தினம் ஜே பி. யு. எம.
சி வி. கே. சிவஞானம், (யாழ் மாநகர ஆணையாளர்)
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
இ. சிவகுருநாதன், (பிரதம ஆசிரியர், தினகரன்.)
ஆ. சின்னத்தம்பி ஜே. பி.
ஆ குணநாயகம்.
மு. சிவராசா.
சி. சிவசுப்பிரமணியம்,
(இணைச் செயலாளர், நாவலர் சபை.)
செ. சொ. சந்திரசேகரம்.
கா. மாணிக்கவாசகர்
து. சிவசுந்தரம்
த. நீதிராசா ஜே. பி.
வைத்திய கலாநிதி. சி. சண்முகநாதன்.
த. கணநாதலிங்கம்.

இவர்களுள் ஒரு சிலர் சமூகத்தில் மதிப்பார்ந்த இடத்தில் இருப்பவர்கள். "நீயுமா புறூட்டஸ்?," என்று சீசர் வியப்போடு கேட்டது போல 'நீங்களுமா ஐயா?" என்று மக்கள் இவர்களைப் பார்த்து வியப்போடு கேட்கிறார்கள். பதில் கூறவேண்டியது இவர்களது பொறுப்பு.

இவ்விதழ் யாழ்ப்பாணம், 411/1, காங்கேசன்துறை வீதியிலிருக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பணி மன்றத்தினரால், யாழ்ப்பாணம் ஸ்ரீகாந்தா அச்சகத்தில் 1986-08-01 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது;